விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆனி 16 நம்புா 29 இதழ் 136
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 30-6-84

## வடபகுதி முகாம்கள்: அகதிகள் விபரம் சேகரிப்பு

[சாவகச்சேரி]

வடபகுதியில் அமைந்துள்ள முகாம்களில் தங்கியுள்ள அகதிகளில் இலங்கைப் பிரஜை, இலங்கைப் பிரஜை அல்லாதோர் பற்றிய விபரம் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அட்மிரல் பெரேரா சகல அரசாங்க அதிபர்களுக்கும் விடுத்துள்ள பணிப்பின்பேரிலேயே இத்தகவல் சேகரிப்பு நடைபெறுவதாகத் தெரியவருகிறது.

அமைச்சர்கள் செ. இராசதுரை, எஸ். தொண்டமான், இ. தொ. கா. பொதுச்செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி ஆகியோரைக் குடிபெயர்ந்தோர் நலன் அபிவிருத்திப் பேரவையினர் அண்மையில் சந்தித்து வடபகுதி முகாம்களில் தங்கியுள்ள அகதிகளின் பிரச்னைகளை அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தது தெரிந்ததே.

## 2-வது டெஸ்ட்

இங்.—286

மே. இந். 18—2

(லண்டன்)

இங்கிலாந்துக்கும் மேற்கு இந்தியாவுக்குமிடையில் இங்கிலாந்தில் நடைபெறும் 2-வது

(8ம் பக்கம் பார்க்க)

# நீதிமன்றக் கட்டடம் தீக்கிரை!

# சகல பதிவேடுகளும் சாம்பல்!!

## கிளர்ச்சிக்காரர்களின் நடவடிக்கை என்று அறிவிப்பு

(கொழும்பு)

**நிஸ்ஸமஹராம நீதவான் நீதிமன்றக் கட்டிடம், நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் முற்றாக எரிந்து சாம்பலானது!**

இச்செய்தி அச்சுக்குப் போகும் போது கிடைக்கப்பெற்ற தகவலின்படி நேற்று அதிகாலை ஐந்து இளைஞர்கள் நீதிமன்றக் கட்டிடத்துக்குத் தீ வைத்ததாகவும் சில மணி நேரத்துக்குள்ளாகவே கட்டிடம் தரைமட்டமாகி விட்டதாகவும் நீதிமன்றத்தின் சகல பதிவேடுகளும் சாம்பலாகி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதிகாரபூர்வமாகக் கிடைத்த தகவலின்படி சில கிளர்ச்சிக்காரர்களின் நாசவேலை காரணமாகவே மேற்படி நீதிமன்றக் கட்டிடம் தீக்கிரையானதாக தெரியவருகிறது.

இதுசம்பந்தமாக சிலர் தேடப்பட்டபோதிலும்நேற்று இரவுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இரகசியப்பொலிசார் தீவிர விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

## பிந்திய செய்தி

மேற்படி நீதிமன்றக் கட்டிடம் தீக்கிரையானது சம்பந்தமாக சிறிசேன என்பவர் தீக்காயங்களுடன் கைது செய்யப்பட்ட போது இச்சம்பவத்தில் சில கிளர்ச்சிக்காரர்கள் சம்பந்தப்பட்ட

(8ம் பக்கம் பார்க்க)

## பொற்கோயிலில் தொடர்ந்து 'வேட்டை'

(அமிர்தசரஸ்)

பஞ்சாப் பொற்கோவில் வளாகத்தில் மேலும் ஏராளமான வெடிமருந்துகளும், ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பொற்கோவில் வளாகத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதலில் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இத்தகவல்களை நேற்று சண்டிக்காரில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சூ)

## பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள்

[யாழ்ப்பாணம்]

பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களில் இதுவரை வேலைக்கு திரும்பமுடியாத சூழ்நிலையில் உள்ளவர்கள் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க தலைமைப் பீடத்துடன் தொடர்புகொள்ளுமாறு சங்கசெயலாளர் திரு. எஸ். மகாசிவம் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்களில் சிலர்மனநோயால் பாதிப்புற்று சிகிச்சைபெற்று வருவதாகவும் சிலர் கர்ப்பிணிகளாக இருப்பதாகவும் இப்படியான சூழ்நிலையில் வேலைக்கு செல்லாமல் இருப்போர் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இப்படியான நிலையிலுள்ளவர்கள், சங்கத்தலைவர் திரு. வணசிங்காவுடன் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர் (க)

## ஜனாதிபதி ஜெயவர்த்தன இன்று புதுடில்லி விஜயம்

[கொழும்பு]

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று புதுடில்லி செல்கிறார்.

திரு. ஜெயவர்த்தன எதிர் வரும் ஞாயிறு, திங்கள் ஆகிய நாட்களில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடன் இலங்கைத் தமிழர் பிரச்னை தமிழ்தீவிரவாதிகளுக்கு இந்தியா உதவியளிப்பது ஆகியன தொடர்பாக இருசுற்றுப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இலங்கை ஜனாதிபதிக்கு இப்பேச்சுவார்த்தையில் உதவியாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி கலந்து கொள்வார். இந்திய தரப்பில் இந்தியப் பிரதமருக்கு உதவியாக வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி நரசிம்மராவ்வும், இந்தியப்பிரதமரின் விசேட தூதுவர் திரு. ஜி பார்த்தசாரதியும் கலந்து கொள்ளவுள்ளனர். (வெ)

## லலித் - நரசிம்மராவ் தொடர்ந்து பேச்சுவார்த்தை

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்னவுக்கும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்குமிடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைக்கான ஆயத்தங்கள்முடிந்துவிட்டன.

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் இலங்கை தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி ஆகியோர் நேற்று இரண்டாவது தடவையாகவும் சந்தித்து இரு தலைவர்களுக்குமிடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை குறித்து ஆராய்ந்தனர்.

இன்று சனிக்கிழமை லண்டனில் இருந்து புதுடில்லி வரும் இலங்கை ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன, நாளை இந்தியபிரதமரைச்சந்தித்துபேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவிருக்கிறார்.

## சிகிச்சைபெற்றவர் மரணமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி 10-ம் வார்ட்டில் சிகிச்சை பெற்றுவந்த 26 வயதான குமாரசாமி பாலச்சந்திரன் நேற்றுக்காலை நிகழ்ந்த அசம்பாவித சம்பவத்தில் மரணமானார்.

சைக்கிளில் வந்த இருவாலிபர்கள் இவரை முதலில் சந்தித்ததாக கூறப்படுகிறது.

இச்சம்பவத்தின் போது வாலிபர் ஒருவரைத் தடுக்க முயன்ற இறந்தவரின் மாமன் சபாரத்தினமும் அருகில்

(8 ம் பக்கம் பார்க்க)

## திங்கள் முதல் கூட். ஊழியர் வேலைநிறுத்தத்தில் குதிப்பர்!

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தினர், நாளை மறுதினம் திங்கட்கிழமை அடையாள வேலைநிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர்.

கூட்டுறவு ஆணையாளருக்கும் கூட்டுறவுச்சங்க நிர்வாகங்களுக்கும் முன்வைத்த 14 அம்சக் கோரிக்கைகள் பல மாதகாலமாகியும் நிறைவேற்றத் தவறியமைக்காகவே அடையாள வேலைநிறுத்தத்தில் இறங்கவுள்ளதாக கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் திரு. இரா. லோகநாதன் தெரிவித்துள்ளார்.

2ம் திகதி நடைபெறவிருக்கும் அடையாளவேலைநிறுத்தத்தில் 40 கூட்டுறவுச்சங்கங்களிலுமுள்ள அங்கத்தவர்கள் குதிக்கவிருப்பதால் அன்றைய தினம் ஏற்படும் சிரமங்களை பாவனையாளர்களும் வாடகையார்களும் பொருட்படுத்தாது கோரிக்கைகளுக்கு ஆதரவு வழங்குமாறும் திரு. லோகநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் முன்வைத்த கோரிக்கைகள் முக்கியமானவற்றின் விபரம் வருமாறு:

சகல கூட்டுறவு ஊழியருக்கும் அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வுகளான ரூபா 146, ரூபா 100 உடனடியாக வழங்கல்,

புதிய சம்பளத்திட்டத்தை உடன் அமுல் செய்தல்.

கூட்டுறவுச் சட்டங்களை மீறிச் செயற்படும் சங்கத்தை 'கறுப்புப்பட்டியலில்' இட்டு அச்சங்கம் தொடர்ந்து மூன்று முறை அதே குற்றங்களைச் செய்யின் சங்கத்திற்குப் பொறுப்பான இயக்குனர் சபையை பதவி நீக்கம் செய்ய உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கூட்டுறவு வேலையாளர்

[8-ம் பக்கம் பார்க்க]

## அத்துலத்முதலி அலுவலகத்தில் அதிசக்திவாய்ந்த குண்டு!

(கொழும்பு)

தேசியபந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் காணப்பட்ட அதிசக்தி வாய்ந்த குண்டு ஒன்று பாதுகாப்புபடையினரால் செயலிழக்கப்பட்டது.

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபன கட்டடத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் அதிசக்தி வாய்ந்த குண்டு ஒன்று நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது.

அமைச்சர் பயன்படுத்தும் மலசலகூடத்துக்கு நேரே கீழ் மாடியில் இந்த குண்டு வைக்கப்பட்டிருந்தது. லங்கா ஒபரோய் ஹோட்டலில் குண்டு வெடித்த சிலமணி நேரத்தில் இந்தக்குண்டு வெடிப்பதற்கு தயார் செய்யப்பட்டிருந்தது.

இச்சம்பவம் குறித்து தகவல் தெரிவித்த தகுதிவாய்ந்த அதிகாரி திரு, டக்ளஸ் லியனகே என்றுமே காணப்பட்டிராத அதிசக்தி வாய்ந்த இந்தக் குண்டு வெடித்திருந்தால் கட்டிடமே இடிந்து நொருங்கியிருக்கும் என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 2 TV உடன் விற்பனைக்குண்டு. கோல்ஸ்ரார் 17''B/W பிலிப்ஸ் 17'' B/W. தொடர்பு: B.A சாள்ஸ் No. 3 மருதடிவீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம். 540

Datsun Sunny: வைத்தியர் பாவித்த 11ஸ்ரீ 6000 தொடரி லக்கமுடைய குறைந்த பாவிப் பும் புத்தம் புதிய நிலையிலு முள்ள கார் விற்பனைக்குண்டு. 46, றக்கா ஒழுங்கை, சுண்டிக் டிளி. 555

இலந்தைக்குளம் வீதி கொழும்புத்துறையில் கடையு டனுன 1 பரப்புக்காணிஉடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ''மல்ரி சேவிசஸ்'' 37 (351) மணிக்கூட்டு வீதி, (வெலிங் டன் சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 22762 (554)

1. நல்ல நிலையிலுள்ள EN தொடரிலக்க மொரிஸ்மைனர் கார், 2. Star றிம் பிளேற்- ஒருசெற் (13''), 3. கார் ரேடியோ, - ரேப்- with Speakers 4. T.V,டெக், 5. Grundic spool tape recorder (4Tracks) நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆனந்தா றைக்கோடிங் பார், காங்கேசன்துறை வீதி, தாவடிச்சந்தி. தொலைபேசி: 309 சுன்னுகம், 594

நல்லூர் வைமன் வீதியில் கோயிலுக்கு அருகாமையில் 2.2 பரப்பில் அமைந்த நல்ல குடிநீரும் சுற்றுமதிலும் சகல வசதியுமுள்ள 4 அறை புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவசுப்பிரமணியம் 22/2 ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 590

காங்கேசன் வீதி - கோண்டாவில் ஸ்ரேசன் றோட் சந்தி முகப்பில் 2 கடைகள் கட்டக் கூடிய முக்காற் (¾) பரப்புச் சதுரக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: எம். சபாபதி கே. கே. எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் 529

கந்தர்மடம் பலாலி றோட் ஆலடிச்சந்தியிலுள்ள 308, 310 இலக்க கடைகள் விற்பனைக் குண்டு. விபரங்களுக்கு; 5A, மணல்தரை வீதி, யாழ்ப் பாணம். 577

North Town வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், குறஸ் புறெய்லேஸ் சேவல் குஞ்சுகள் யூலை மாதம் 1ம், 10ம் திகதிகளில் விநியோகிக்கப்படும். ராதா கிருஷ்ணுஸ், 392. நாவலர் வீதி, கயிலாசபிள்ளையார் கோவிலடி. 585

நல்ல நிலையிலுள்ள Honda Express CC 50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு; 67, குமாரசாமி றோட் திருநெல்வேலி, யாழ்ப் பாணம். 584

பருத்தித்துறை வீதிக்கு அருகாமையில் கட்டைப்பிராய் ஒழுங்கையில் இரண்டு பரப்புக் காணி உடன்விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சே. மகாலிங்கம், காவேரி பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, தொலைபேசி: 22490 (581)

நல்ல பாவனையில் உள்ள Austin A. 30 E. N. Series கார், இரண்டு தேக்க மர அலுமாரிகள் (Teak Wardrobes), போமீக்கா டொப் தேக்க சாப்பாட்டு மேசை (Formica Top Teak Dining Table), 10 பல வர்ண Fiber glass கதிரைகள், முதிரை மர கட்டில், 24 piece Pyrex Dinner Set, மற்றும் வீட்டு சாமான்கள் உடனடி விற்பனைக்கு உள்ளது. SPENCER 66 பிறவுண் வீதி யாழ்ப்பாணம். 507

## விற்பனைக்கு

தும்பளை வீதியில் வடக்குப் பக்கமாக மணல் ஒழுங்கையில் 100 யார் தூரத்தில் வீடுகட்டு வதற்கேற்ற நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய 7½ பரப் புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு, சொ. இரவீந்திரன் (ஆசிரியர்) ''குணக்குன்றம்'' மணல் ஒழுங்கை, தும்பளை பருத்தித்துறை. 582

கிளிநொச்சி கண்டி றோட் டிற்கு கிட்டிய தூரத்தில் 7-8 அறைகள் கொண்ட மிகவிசாலமான வீட்டுடன் 16 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. மின்சார வசதியும் உண்டு. மில்கட்டுவதற்கும் ஏற்ற இடம். கண்டி றோட்டில் 200 யார் தூரத்தில் அமைந்துள்ளது. செ. யோகராஜா 130, தாயகம் திருநகர். கிளிநொச்சி. 596

## தேவை

எமது வர்த்தக ஸ்தாபனத்திற்கு இரும்பு வியாபாரத்தில் குறைந்தது 5 வருட அனுபவமுடையவரும், கணக்கு எழுதக்கூடியவருமான நேர்மையுள்ள விற்பனையாளர் ஒருவர் உடன் தேவை. நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும். அ. மரியநேசன், உரிமையாளர், அன்ரனீஸ் ஹாட்வெயேஸ் - பண்டத்தரிப்பு. 597

பென்சி புடவை வியாபாரத்தில் 5 வருஷத்திற்கு மேல் அனுபவமுள்ள ஆண் விற்பனையாளர் 1-7-84 (ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு நேரில் வரவும். இப்படிக்கு சி. சிதம்பரநாதன் கே. எஸ். பான்ஸி ஹவுஸ் 176, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 583

மரத்தளபாடங்கள் பொலிசிங் செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். டில்கா பேணிச்சர் பலஸ், 234, 236, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 546

கணக்கியல்துறையில் நீண்ட கால அனுபவமுள்ள கணக்காளர் (Book Keeper) விபரங்களுடன் நேரில் வரவும். டில்கா பேணிச்சர் பலஸ் 34, 236, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 547

சென்னையில் (மற்றுசில்) வசிக்கும் தாய் தகப்பன் 12 வயசு மகள் அடங்கிய இலங்கைத் தமிழ்க் குடும்பத்திற்கு உதவியாக இருக்க ஓர் தமிழ்ப் பெண் தேவை. உணவு தங்குமிடம் சம்பளம்தாராளமாக வழங்கப்படும். இந்தியா செல்வதற்கு வேண்டிய கடவுச்சீட்டு பெறவேண்டிய உதவியும் செய்யப்படும். விரும்பியோர் குடும்ப விபரம், வயது, எதிர்பார்க்கும் சம்பளம் ஆகிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 538 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 538

## TO LET

New modern house—3 bed rooms with Fans, terrazo floor, all facilities. Nallur close town. Doctors, professionals, small family. Contact 142, Hospital Road. Phone : 22335 (598)

## வாடகைக்கு

திருநெல்வேலி சந்தி ஸ்ரீ வாணி புத்தகநிலையத்திற்கு அருகாமையில் உள்ள பலசரக்குக்கடை வாடகைக்கு உள்ளது. மேலதிக விபரங்கட்கு: திருநெல்வேலி ஸ்ரீவாணி முகாமையாளரிடம் தொடர்பு கொள்ளவும். 588

## வகுப்புக்கள்

Pharmacist Course (External) Dr. Gnanapanditham அவர்களால் சனிக்கிழமைகளில் நடைபெறுகின்றன. மீண்டும் ஆரம்பம்30-6-84சனிக்கிழமைகாலை. சு.பாலசுப்பிரமணியம் யாழ். கல்வி நிலையக் கட்டிடம் மேல்மாடி (சாந்தித் தியேட்டர் அருகே) 22, இராமையாச்செட்டியார் ஒழுங்கை யாழ்ப்பாணம். 548

## கல்வி

G. C. E. (O/L) மாணவருக்கு ஆங்கில இலக்கணம், இலக்கியம் (Grammar.English Literature) Radio and T. V. English Lessons, Spoken English தனிப்பட்ட முறையாக ஆரம்பத்திலிருந்து கற்றுக்கொடுக்கப்படும். S. Kumaravelu, Ret: Principal English Mobile Unit Inspector Gurusamy House ஓட்டுமடம் யாழ்ப்பாணம். 269

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இரண்டு டயரியும், ஒரு கணக்குக்கொப்பியும் சேர்ந்த ஒருபார்சல் தவறிவிட்டது. அதை கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சத்திர சந்தியில் அமைந்துள்ள C. S. K. கட்டிடத்தில் இருக்கின்ற ஹாஜி அப்பாஸ் சன் கடையில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும் 517

## WANTED

Applications are invited in own hand writing those who with aptitute in Electronics to be trained in Colombo as Photocopier Technicians for a period of three months. Training fee. of Rs.3,000-00 repayable in three equal instalments as monthly allowances. A deposit of Rs. 2,500-00 also required which is repayable after satisfactory completion of two years service contract. Good prospects - 484, Hospital Road, Jaffna. 549

## வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அறிவித்தல்

வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் 6,000 வெற்றுச்சாக்குகள் வரை கேள்விப்பத்திர மூலம் விற்பனையாக இருக்கின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 50/-உம் கேள்விப் பத்திரம் ஒன்று ரூபா 1/- உம் செலுத்தி சங்க வேலை நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 7.7.84ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**பொது. முகாமையாளர்**
நீர்வேலி
1984-06-27 600

## சயன்ஸ் அக்கடமி

அச்சுவேலி

**A/L 86**

தூய, பிரயோக கணிதம்

**திரு. வெக்டர்**

யூன் 30 சனி 3 மணி

415

## விற்பனைக்கு

மல்லாகம் இறை அங்கிணியவுடை நிலைப் பரப்புஆறேஅரைக்கால் நிலமும், வீடும், கிணறும் உள்ள எனது காணி விற்பனைக்குண்டு. இது மல்லாகம் நீலியம் பனைப் பிள்ளையார் கோயிலுக்குப் போகும் வீதியில் அருகில் உள்ளது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**நல்லதம்பி மகள் தெய்வானைப்பிள்ளை,**
இல. 299, சங்கத்தானை வீதி, கண்டிறோட், சாவகச்சேரி. (593)

## வெற்றிடம் R. M. P.

நிரந்தர வைத்தியருக்கு லீவு நாட்களில் கடமை புரிய பதிவு செய்யப்பட்ட வைத்தியர் உடன் தேவை. தொடர்பு கொள்ளவும்; டாக்டர் பத்மநாதன், தலைவர்

**வல்லை லயன்ஸ் வைத்தியசாலை,**
7-ம் கட்டையடி, மல்லாகம். (591)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## முக்கிய அறிவித்தல்

''ஈழநாடு'' பத்திரிகையில் பிரசுரிப்பதற்கான மரண அறிவித்தல் — நன்றிநவிலல் — நினைவஞ்சலி முதலான விளம்பரங்களுக்கு இனிமேல் ''பாஸ்போட்'' அளவுடைய படபுளக்குகள் (BLOCKS) மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மேற்பட்ட அளவுடைய புளக்குகள் பிரசுரத்திற்கு ஏற்கப்படமாட்டாது.

நிர்வாகி, ''ஈழநாடு''.

(578)

## தாவரவியல்

புதிய வகுப்பு

ஆசிரியர்: திரு. சிவவீரசிங்கம்

| | சனி | ஞாயிறு |
|---|---|---|
| 85 | 10–15 | 10–15 |
| 86 | 11–15 | 11–15 |

ஆரம்பம்: 1–7–84

**நியூ கேம்பிரிட்ஜ்,** திருநெல்வேலிச் சந்தி

503

## வீடு / காணி விற்பனைக்கு

1. யாழ். பழைய பூங்கா வீதிக்கு அருகாமையில் 2 பரப்பு காணியில் புதிய வீடு.
2. கோப்பாய் தபாற்கந்தோருக்கு சமீபமாக கிணற்றுடன் பத்துப்பரப்பு தோட்டக்காணி.
3. யாழ். அம்மன் வீதியாக மூன்றுபரப்பு வீடு கட்டக்கூடிய காணி.
4. யாழ். கொழும்புத்துறை துண்டி வீதியாக ஐந்து பரப்புக்காணி.

விபரங்களுக்கு.
JAFFNA PROPERTY TRADES LTD
3, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
போன்: 23698

## அரிய சந்தர்ப்பம்

★ COMPUTER PROGRAMMING
BASIC– COBOL
40 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
★ I. D. P. M. (COMPUTER LONDON EXAM)
★ DIPLOMA IN HOTEL MANAGEMENT
O/L சித்தியடைந்த இருபாலாரும் சேரலாம், வெளிநாடு செல்வோர்க்கு குறைந்த காலத்தில்
★ FRENCH ★ GERMAN
★ ENGLISH கற்பிக்கப்படும்.

மீண்டும் ஆரம்பம்: 30 – 06 – 84

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை)

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

**கொழும்பு ஸ்ருடியோ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாப்பொற்கோயிலுள்பிரவேசிக்கும் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது!

## ஆயிரக் கணக்கான பக்தர்கள் வழிபாடு!

புதுடில்லி, ஜூன், 29 பஞ்சாப்பின் அமிர்தசரஸ் பொற்கோவிலுக்குள் பிரவேசிக்கும் கட்டுப்பாட்டை இந்திய அரசு தளர்த்தியதை அடுத்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு சென்று வழிபட்டனர்.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமனும் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகளும் அமிர்தசரஸ் பொற்கோவிலுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டனர்.

அதேவேளை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பஞ்சாப்பின் தற்போதைய நிலைமை குறித்து அம்மாநில கவர்னர் பாண்டேயுடன் புதுடில்லியில் கலந்துரையாடினர்.

பஞ்சாப்பில் அண்மையில் இடம்பெற்ற பயங்கரவாதச் சம்பவங்களையடுத்து அங்கிருந்து வெளியேறி, வேறு இடங்களில் குடியேறிய பண்ணைத் தொழிலாளர்கள் சொந்த இடங்களுக்குமீண்டும் திரும்பியுள்ளனர்.

பஞ்சாப்பிற்கான புதிய ரயில் சேவைகளும் இன்று முதல்ஆரம்பிக்கப்படவுள்ளன. (வெ

## விமான விபத்து: பத்திரிகையாளர் 14பேர் பலி!

அங்காரா, ஜூன் 29 துருக்கியில் இடம்பெற்ற விமான விபத்தொன்றில் 18பேர் பலியானர்கள். இவர்களில் 14பேர் பத்திரிகையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விமான விபத்து அத்திலாந்திக்குக் கிழக்கே இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## போதைவஸ்துக் கடத்தல்: 10 இலங்கையர்க்கு போலந்தில் சிறைத்தண்டனை

வார்சோ, ஜூன், 29 போலந்தில் போதைவஸ்துக் கடத்தலிலீடுபட்ட பத்து இலங்கையர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு ஒரு வருடத்திற்கும், இரண்டு வருடத்திற்குமிடைப்பட்ட சிறைத்தண்டனையை வார்சோ நீதிமன்றம் விதித்தது. [வெ-

## போர்க் கைதிகள் பரிமாற்றம்

டெல் அவில், ஜூன் 29 சிரியாவும் இஸ்ரேலும் 319 போர்க்கைதிகளைப் பரஸ்பரம் பரிமாற்றம் செய்து கொண்டன. (வெ)

## இந்திய - வியட்நாம் பேச்சுவார்த்தை

ஹனோய், ஜூன், 29 இந்தியாவிற்கும், வியட்நாமிற்கும் இடையிலான உயர் அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுக்கள் ஹனோய்யில் ஆரம்பமாகியுள்ளன.

இப்பேச்சுக்களில் இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார ஒத்துழைப்பு, சர்வதேச விவகாரங்கள் ஆகியன பிரதான இடத்தைப் பெறுமென்று இந்திய உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (வெ)

## கிரிக்கெட் டெஸ்ட்: இங். 167 - 2

லண்டன், ஜூன் 29 இங்கிலாந்திற்கும் மேற்கிந்திய தீவுகளுக்கிமிடையே லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்றுவரும் 2 வது கிரிக்கெட் டெஸ்டில், இங்கிலாந்துக் கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தொடர்ந்து ஆடுகிறது.

முதலாவது டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் கோஷ்டி இன்னிங்ஸால் வெற்றி பெற்றது. தெரிந்ததே. (வெ)

## தீயணைக்கும் படை நிதி: இதுவரை வசூல் $2\frac{3}{4}$ லட்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர ஆணையாளர் ஆரம்பித்துள்ள தீயணைக்கும் படை அமைப்பதற்கான நிதிக்கு இதுவரை 2 லட்சத்து 76 ஆயிரம் ரூபா சேர்ந்துள்ளது விபரம் வருமாறு:

முன்தொடர்ச்சிரூ. 251,617-00

ரஞ்சனுஸ், யாழ்ப்பாணம் ரூ.2500, டாக்டர் எஸ். யோகநாதன் யாழ் பொது அரசாங்க வைத்தியசாலை ரூ. 250, டாக்டர் வி. குகதாசன், யாழ் பொது அரசாங்க வைத்திய சாலை ரூ. 250, டாக்டர் ஆர். ஜோன், யாழ்பொது அரசாங்க வைத்தியசாலை ரூ. 250, யாழ் சுகாதார வைத்திய அத்தியட்சகரும் மற்றும் 28 நபர்களும் ரூ. 425, கறுவாக்காடு மகளிர் வைத்தியசாலை, கொழும்பு ரூ. 1000, ரி. எம். முத்துலிங்கம், சபாஸ் ஸ்ருடியோ ரூ. 50, துர்க்காஓட்டோகாட்வெயர்ஸ் ரூ. 500, குலாம் சன்ஸ், ஸ்ரான்லி வீதி ரூ. 100, சுபமாலா மோட்டோர்ஸ் ரூ. 250, வி. கே.இராசரத்தினம், ஸ்ரான்லி வீதி ரூ. 1000, ஏ. சர்வானந்தராசா அம்பலவாணர் அன்ட் சன்ஸ், கே.கே.எஸ். வீதி, ரூ. 1101, இ. கனகசபாபதி தில்லை வாசா, மானிப்பாய் வீதி ரூ. 1001, ரி. சிறி இராமநாதன் சிட்னி பல்கலைக்கழகம், சிட்னி ரூ. 1000, அபேஸ் ஏஜென்சீஸ் ப. நோ. கூ. சங்கக் கட்டிடம் கே. கே. எஸ். வீதி ரூ. 500, பி. கே. வேலப்பகுட்டி, நவீன சந்தை ரூ. 1001 மேக்கன் ரைல் பாதுகாப்புச் சேவை 1ம் குறுக்கு வீதி ரூ. 100, த. சந்திரன், கொட்டடி ரூ. 100, ஆர். சேகரன், கொட்டடி ரூ. 100, எஸ். சிவசுப்பிரமணியம், கொட்டடி ரூ. 100, நலன்புரிச் சங்கம், காணிப்பதிவகம் யாழ்ப்பாணம் ரூ. 250, ஆர். ஜானகி, பாங்சால் வீதி ரூ. 60, மணியம்ஸ், நவீன சந்தை ரூ. 1501, ரி. சங்கரப்பிள்ளை, நவீன சந்தை ரூ. 1001, ஏ. எச் எம். மதார், நவீனசந்தை ரூ. 1000, நாதன்ஸ், நவீன சந்தை ரூ. 200, ஓம் ரெக்ஸ், நவீன சந்தை ரூ. 51, கணேசலிங்கம் ரூ. 251, சி. கனகசபாபதி, நவீன சந்தை ரூ. 500, தாஜுனுஸ், நவீன சந்தை ரூ. 200, யூலியாஸ், நவீன சந்தை ரூ. 51, சாரதா, நவீனசந்தை ரூ. 500, க. கந்தசாமி, நவீன சந்தை ரூ. 251, கீதா சாறி சென்ரர், நவீனசந்தை ரூ.250, புஸ்பா பன்சி பலஸ், நவீன சந்தை ரூ. 50, எஸ். கே. எம். ரெக்ஸ்ரைல்ஸ், நவீனசந்தை 200, எம். மாணிக்கசிங்கம், நவீன சந்தை ரூ. 250, பெட்டா பலஸ், நவீன சந்தை ரூ. 501, ஜெயா பன்சி ஹவுஸ், நவீனசந்தை ரூ. 250, சர்மிளாய், நவீனசந்தை ரூ. 250, நியூ சுவாயன்ஸ், நவீனசந்தை ரூ. 101, ராஜன்ஸ் பன்ஸி ஹவுஸ், நவீன சந்தை ரூ.250. நியூ செலக்சன்ஸ், நவீனசந்தை ரூ.200, முஸ்தாக், நவீனசந்தை ரூ. 250, சிட்டி ரெக்ஸ், நவீன சந்தை, ரூ 201, பிரகாஸ் ஸ்டோர்ஸ், நவீன சந்தை ரூ. 250, ரி. கந்தசாமி, நவீன சந்தை ரூ. 51, பஸ்னுஸ், நவீன சந்தை ரூ. 250, முத்து அன் சன்ஸ், நவீனசந்தை ரூ. 100, கல்பனுஸ், நவீன சந்தை ரூ. 251, சண்முகம் ரெக்ஸ், நவீனசந்தை ரூ. 501, நிகானீஸ், நவீன சந்தை ரூ. 250, அரேஸ் ரெக்ஸ், நவீனசந்தை ரூ. 251, சுபைர்ரெக்ஸ், நவீன சந்தை ரூ. 501, கண்டி ஸ்ரோர்ஸ், நவீன சந்தை ரூ. 251, ஏ. கே. பிரதர்ஸ், நவீனசந்தை ரூ. 501, டிசைன் ரெக்ஸ், நவீனசந்தை ரூ. 501, சீ.ரெக்ஸ்ற், நவீனசந்தை 101, பி. கீமான்பிள்ளை லக்கி ரெக்ஸ், நவீனசந்தை ரூ. 251, காவேரி நவீனசந்தை 250, மக்வின்ஸ், நவீனசந்தை 150, கொக்குவில் சனசமூகநிலையம் டிக்கற் மூலம் வசூல் ரூ. 500, மொத்தம் ரூ. 276,674-00

## அமைச்சுக்களுக்கு பலத்த காவல்

(கொழும்பு)

'லங்கா ஒப்ரோய்' ஹோட்டலில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து கொழும்பிலுள்ள அமைச்சுகளுக்கும், அரசாங்கத் திணைக்களங்களுக்கும், கூட்டுத் தாபனங்களுக்கும் பலத்த காவல் போடப்பட்டுள்ளது. (இ-வெ)

### உறவுகளை விருத்தி செய்யும்

## றீகனின் யோசனைகளை சோவியத் நிராகரித்தது

மாஸ்கோ, ஜூன் 29 சோவியத் யூனியனுடன் உறவுகளை விருத்திசெய்ய ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகனுல் தெரிவிக்கப்பட்ட யோசனைகளை சோவியத்தின் உத்தியோகபூர்வ செய்தி ஏடான 'டாஸ்' நிராகரித்துள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி றீகனுல் தெரிவிக்கப்பட்ட 16துறைகளில் உறவுகளை விருத்திசெய்யும் யோசனைகளையே இச்செய்தி ஏடு நிராகரித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே ஜனாதிபதி றீகன் இந்த யோசனைகளைத் தெரிவித்துள்ளாரென்று 'டாஸ்' செய்தி ஏடு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுடனுன உறவுகளை சோவியத் யூனியன் சகஜநிலைக்குக்கொண்டுவர எடுத்த முயற்சிகளை முன்னர் அமெரிக்கா நிராகரித்திருந்ததாக அது கூறியுள்ளது. (வெ)

## அதிபர் இல்லை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கொத்தணி அமைப்புமுறையில் இயங்கிவந்த பாடசாலைகளின் அதிபர் திரு. சி. இராசநாயகம் யாழ். கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஒரு மாதமாக இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

இதன் காரணமாக இங்குள்ள பாடசாலைகளில் நிலவி வருகின்ற தளபாடம், ஆசிரியர் பற்றுக்குறையை யாரிடம் முறையிடுவது என்று பெற்றோர்களும், ஆசிரியர்களும் அங்கலாய்க்கின்றனர்.

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வரணி சாவலப்பிட்டி கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நாளைஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை ஆனி உத்தரமும், 10ம் திகதி சப்பறத் திருவிழாவும், 11ம் திகதி தேர்த்திருவிழாவும், 12ம்திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

கிரியைகளை பிரம்மஸ்ரீ சி. வாசுதேவக் குருக்கள் நடத்திவைப்பார்.

குரோஸ் ட்ரவல் சேவிசஸ் பிறைவேற் லிமிட்டெட்
(CROSS TRAVEL SERVICES (Pte) LTD.)
ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை :-
குரோஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL, CHEAP RATES, CONTACT US RIGHT NOW.

குரோஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை :
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை.
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD.
MODEL MARKET, JAFFNA.
Phone No : 22040, 22065. Telex No : 22207 (C T S)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மல்லிகை, முல்லை, ரோசா, சந்தனமரம்- இவையெல்லாம் நறுமணம் அளிப்பவை என்பதில் ஐயமில்லை. ஆனல் அறம் வீசும் நறுமணம் இவையெல்லாவற்றிலும் மேலானது.

— தர்மபதம்

## நமதுநோக்கு

# சிவில் வாழ்வுக்குத் திரும்ப நாடு தவிக்கிறது

சின்ன நாடு சீராகச் சிறப்பாக மக்கள் வாழ்ந்து வந்த நாடு இன்று சின்னு பின்னப்பட்டு, சீர்கெட்டிருக்கிறது.

இலங்கை வானெலியைத் தவிர எல்லோருக்கும் தெரிந்த செய்தி இது.

கொழும்புப் பிரபல பத்திரிகைகள்கூட தம்மை அறியாமலே இதனை அடிக்கடி வெளிப்படுத்துகின்றன.

ஐந்து நட்சத்திர ஜனநாயகம் இலங்கையென்று ஜனதிபதி ஜெயவர்த்தன தமது வெளிநாட்டுப் பிரயாணத்தில் பெருமிதங் கொண்டது தவறல்ல.

எங்கள் நாட்டின் பெருமையை வெளிநாடுகளில் ஆட்சியாளர் கைவிட்டால் வேறு யார் கைகொடுத்து உதவுவார்? ஆனல் அந்த மிகைப்பட்ட கூற்று கண்ணூறுபடக் காரணமாய் விட்டதெனலாம்.

நாட்டின் தலைநகரில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் குண்டு வெடித்ததும் பெண் ஊழியர் ஒருவர் பலியானதும் பலர் காயப்பட்டதும் இவ்வாரம் நடைபெற்ற பல்கலைக்கழக குழப்பத்தில் உயிரிழந்த இரண்டு அருமை மாணவர் பட்டியலுக்குச் சேர்க்கப்படவேண்டியது.

இவை இருவிதப்பட்ட கொலைகள்; ஆனுலும் மக்களுக்கும் அரசுக்கும் உருவாகிவரும் பிணக்கை மட்டுமல்ல, அதனைத்தீர்க்கத் துப்பாக்கி, குண்டு போன்ற வன்செயல்கள் இன்றிமையாதநிலையையும் உணர்த்துகின்றன.

குழப்பம் ஏற்படுத்தும் பிரச்னை வெவ்வேருனலும், ஆட்சிக்கு எதிரான வன்செயல், அதனை அடக்க எடுக்கும் எதிர் நடவடிக்கை இவ்விரண்டும் இன்று நாடனைத்தையும் கலக்கிவருகின்றன.

சாதாரண வாழ்வில் சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து நடக்கும் மக்கள் (மாணவர் உட்பட) இன்று இவ்வித தீவிர செயல்களில் ஈடுபடத் தயங்குவதில்லை; இதனைக் கட்டுப்படுத்த முடியாதநிலையில் அடக்குமுறைகள் தீவிரமாக அமுல்படுத்தப்படுவது சாதாரணம்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அவசரகால ஆட்சியைக் கண்டித்த இன்றைய ஆட்சியாளர் இன்றையநிலைமையை எவ்விதம் விளக்கித் தப்பமுயன்றுலும் அது பழையகுருடியின் கதையாகவே முடியும். பழித்த குடிக்கு இழுப்பாட்டியம்!

இந்தக்குழப்பநிலை இந்தியாவிலும் காணப்படுகிறது. பஞ்சாப், பம்பாய்அஸாம், காஷ்மீர் போன்ற மாநிலங்களில் - இலங்கையை ஒப்பிட்டால் பெரும் நாடுகள் தீராத நோய் போன்ற குழப்பங்கள் வருடக்கணக்கில் நீடித்திருக்கின்றன.

ஆனல் இலங்கை ஒரு சிறு நாடு. உள்நாட்டுப் போர், வெளிநாட்டு யுத்தம்,தீராத இனக்கலவரம் போன்ற பெரும் கொடிய சம்பவங்கள் இந்த நாட்டை இதுகாறும் பீடித்திருக்கவில்லை.

இதற்குப் புறநடையே கடந்த ஆடிக்கலவரம். இது இனிமேல் ஒரு போதும் நடைபெறமாட்டாதென்று ஆட்சியாளர் மட்டுமல்ல சிங்கள மக்களின் தலைவர்களே நாணமுற்று வற்புறுத்தி வருகின்றனர்.

ஆனல் இது நடந்தவாறென்ன?

இந்தியாவில்நடைபெறும் கொடிய சம்பவங்களை நன்ருகப் படித்து பாடம் பண்ணும், இலங்கை வானெலியும், பாலில் நஞ்சைக் கலக்கத் தயங்காத பொறுப்பற்ற சில பத்திரிகைகளும் ஒன்றை மறந்து விடுகின்றன.

அது என்ன? பயங்கரவாதமென்று கணித்து அதனைத் தடுக்க எடுக்கும் நடவடிக்கைகளில் இராணுவத்தைப் பிரயோகம் செய்தல் இந்திய அரசியலில் நாம் இலகுவில் காண முடியாது.

அரசியல் சவாலுக்கு-வன்செயல் உட்பட- இராணுவ நடவடிக்கைஆகாது; இரண்டும் கலப்பது அனுமதிக்கப்படுவதில்லை. பஞ்சாப்பில் அது ஈற்றில் தேவைப்பட்ட போதும், அதனை வெளியேற்ற துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இலங்கை வாழ் மக்கள் சீரான சிவில் வாழ்வு காண பசி தாகம் கொண்டு தவிக்கின்றனர்; நாள் ஒன்றுக்கு ஒன்றரைக் கோடி செலவாகும் பயங்கரவாதம் ஒழிய வேண்டும்.

இதற்கு இன்றைய அரசு உதவுமா?

நல்லூர் ஆலயத்தையும் கேணியையும் பிரிக்கும்

# வீதியை ஆலயத்துக்கு வழங்கும்படி கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கும், தீர்த்தக்கேணிக்குமிடையிலுள்ள வீதியை கோவில் அபிவிருத்தி கருதி கோவிலுக்கு உரித்தாக்கவேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்து வருகிறது.

முன்பு இந்த வீதி, பருத்தித்துறைவீதி வழியாக இருந்து பருத்தித்துறை வீதி, திசை திருப்பிவிடப்பட்டு இந்த வீதியில் வாகனப் போக்குவரத்து தடை செய்யப்பட்டது.

இந்த வீதி எந்த சந்தர்ப்பத்திலும் வேறு ஒருவருக்கு வழங்கப்பட முடியாத நிலையில் இருப்பதால் இதனை ஆலய அபிவிருத்திக்கு கோவிலுக்கு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

# தயாள குணம் படைத்த டாக்டர் சண்முகரத்தினம்

பொதுச் சேவையே பொன்னெனப் போற்றிய டாக்டர் கே. ஸி. சண்முகரத்தினம் அவர்கள் அமரத்துவம் அடைந்து' இன்றுடன் 18வருடங்கள் உருண்டோடி விட்டன.

தெய்வமணம் கமழும்சிந்தையுடன் கடமையே பெரிதென பணிபுரிந்து ஈழத்திற்கே எடுத்துக்காட்டாக மிளிர்ந்தவர் டாக்டர் சண்முகரத்தினம்.


அன்னர் பாடசாலை மாணவராக இருந்த காலத்திலேயே பொதுத்தொண்டைபெரிதாக மதித்து செயற்பட்டார். அவரின் நண்பர்களாகிய நாம் ஒன்ருகச் சேர்ந்து செல்லும் பொழுது பொதுச் சேவையின்

**'ஈழநாடு' பத்திரிகை ஸ்தாபகர்களில் ஒருவரும் பிரபல மருத்துவ கலாநிதியும் ஏழை மக்கள் பங்காளருமான டாக்டர் கே. ஸி. சண்முகரத்தினம் அவர்களின் நினைவு தினம் இன்ருகும்.**

செயல்வீரர் டாக்டர் சண்முகரத்தினம் அவர்கள்.

அரசாங்க உத்தியோகம் பார்க்க எவ்வளவோ சந்தர்ப்ப சூழ்நிலையிருந்தும் அவைகளை போற்றத்தக்க வகையில் பல்வேறு அபிவிருத்திகளைச் செய்துள்ளார். தினமும்பரம ஏழைகளுக்கு இலவசமாகவே மருந்துகளை வழங்கிவந்தார். யாருடனும் புன்னகையுடன் பூத்த முகத்துடனேயே சம்பாசிப்பதும் இவரின் வழக்கம்.

டாக்டரின் சேவைக்குசிகரம் வைத்தாப்போன்று அரசாங்கத்தால் அன்னுரை யாழ். நகர மேற்குப்பகுதிக்கு பிறப்பு இறப்பு பதிவுகாரராகவும் நியமித்தது. அன்னுருக்கு எவ்வளவோ அசௌகரியங்களிருந்தும், திடகாத்திரத்துடனும் விடாமுயற்சியாலும் தெய்வ நம்பிக்கையுடன் பதிவாளர் கடமையையும் புரிந்து மக்களினதும் அரசாங்கத்தினதும்



பெருமையை எம்மிடம் வற்புறுத்திக் கூறும் வழக்கம் அவருக்கு இருந்துவந்தது. தமது வாழ்க்கையில் அவர் இதைச் செய்தும் காட்டியுள்ளார்.

ஒருசமயம் இந்துக் கல்லூரியில் லத்தின் பாஷை பரீட்சை எடுப்பதற்காக நாங்கள் இருவரும் பாடசாலையை நோக்கி விரைந்துகொண்டிருக்கும் சமயம், வீதியில் மயக்கமுற்று வீழ்ந்திருந்த ஒரு வயோதிபரை அணுகி, சுய அறிவு வரும்வரையும் தமக்குத் தெரிந்த முதல் உதவிகளை செய்து கொண்டிருந்தார். அந்த வயோதிபர் எழுந்து நடக்கக்கூடிய சக்திவரும்வரையும் அந்த இடத்தை விட்டு அவர் அகலவேயில்லை. அப்பொழுது அன்று நடக்கப்போகும் பரீட்சை பற்றி ஞாபக மூட்டிய பொழுது அவர் என்னிடம் கூறிய வார்த்தைகள் இன்றும் நினைவிலிருக்கின்றன. இச்சேவையானது நம்மைப் போன்ற மாணவர்களுக்கு மிகவும் இன்றியமையாதது. இதனுல் தெய்வத்தின் நற்பலன் கிட்டும், இப்பெரியாரை அவர் இல்லம்வரை கூட்டிச்சென்று விட்டு பரீட்சைக்குச் செல்வோம் என்ருர்.

அதன்படி அப்பெரியவரைக் கவனித்துவிட்டு பாடசாலைக்குச் செல்கையில் பரீட்சை முடிந்திருக்குமோவென எமக்கு அச்சமாய் இருந்தது. ஆனுல் நல்ல காரியத்துக்கு தெய்வம் அருள்புரியும் என்ற வாக்குக்கமைய கரும்பலகையில் கொட்டை எழுத்தில் ''இன்று நடக்கவிருந்த லத்தின் பாஷை பரீட்சை அதற்குரிய ஆசிரியர் வருகைதராத காரணத்தினுல் மறுநாள்வரை ஒத்திப்போடப் பட்டுள்ளது'' என்று எழுதப் பட்டிருந்தது.

இப்படியே பல சந்தர்ப்பங்களில் அரிய பெரிய தொண்டுகளை புரிந்து பொதுச்சேவையே அரும்பெரும் பணியென செயலில் காட்டிய

விரும்பாது மக்களுக்கு தொண்டுசெய்ய வேண்டுமென்பதே இவரின் உள்நோக்கமாக இருந்தது. வைத்திய தொழிலை ஆரம்பித்த இப்பெரியார் பொதுவாக ஏழைகளின் துயர்களை அவ்வப்பொழுது துடைத்துவந்ததை யார்தான் மறக்கவோ மறைக்கவோ முடியும்.

இதுவரை ஈழத்தில் இல்லாதபடி முதல்தரமான ஆயுர்வேத சித்த மருந்துகளை நவீன இயந்திரங்களைக்கொண்டு தனது மருந்துச்சாலையில் தயாரித்துவந்த அவர் வைத்திய ஆராய்ச்சியில் ஈடுபட்டு பலரும் பாராட்டையும் பெற்.. அவர்.

உயரிய குறிக்கோளுடன் செயல்பட்டு ஏழைமக்களின் வாழ்விற்கு ஏணியாக இருந்து வந்த அன்னுர் திடீரென காலன் வசப்பட்டமை யாழ். நகருக்கும் மக்களுக்கும் பேரிழப்பாக முடிந்தது?

தெய்வப் பிறவியாக, தியாகச்சுடராகஒளிர்ந்த அன்னுரின் ஆன்மாசாந்தியடைய வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை இருகரங்கள் ஏந்தி பிரார்த்திப்போமாக, இதுவே நாம்செய்யும் நன்றிக்கடன்.

— எம். ஈ. ஷாஹுல் —

# வாழ்வாங்கு வாழ்ந்தவர்

பூவுலகில் பிறந்தவர்கள் எல்லாம் வானுலகிற்கு என்ருவது ஓர் நாள் போய்த்தான் தீரவேண்டும் அது இயற்கையின் நியதி.

அப்படி மண்ணுலகிலிருந்து விண்ணுலகு செல்வோர் எல்லோருக்கும் அங்கு தெய்வீக அந்தஸ்துகிடைப்பதில்லை. மண்ணுலகிலும் விண்ணுலகிலும் சம அந்தஸ்துடன்விட்டிருக்கும் பெருமக்கள் வரிசையிலே இற்றைக்கு பதினெட்டு ஆண்டுகளுக்குமுன் தமிழ் மக்களிடையே பிரபல்யமடைந்த அமரர் டாக்டர் க. சி. சண்முகரெத்தினமும் இருப்பார் என்று நாம் நம்பலாம் தனக்கென, தனது சுற்றம்சூழலுக்கு மட்டுமின்றி முழுத்தமிழ் சமுதாயத்திற்குமாகவாழ்ந்தபெருந்தகை அவர். டாக்டர் சண்முகரெத்தினம் அவர்கள் விண்ணுலகேகிய சந்தர்ப்பத்தை ஒரு கணம் கற்பனையாக நினைத்துப் பார்த்தேன் அதுவருமாறு:

பூவுலகிலிருந்து விண்ணுலகேகிய வேளையில் அங்குதேவர்களும், தேவகணங்களும் சூழ்ந்துகொள்கிருர்கள்.

''நீர் எங்கிருந்து வருகிறீர், உமது பெயர் மற்றும் விபரங்களைச் சொல்லும்'' என்று நச்சரிக்கிருர்கள்.

அதற்கு டாக்டர் அவர்கள் மிக தன்னடக்கத்துடன் ''நான் பூவுலகில் யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறேன் எனக்கு பெற்ருேர் இட்ட பெயர் சண்முகரத்தினம்,'' என்கிருர்.

''அப்படியானுல் உமக்கு வேறு பெயர்களும் இருக்க வேண்டுமே!'' என்கிருர்கள்.

''பொதுமக்கள் என்னை வைத்தியகலாநிதி, குழந்தைகளின் இரட்சகர்,பரோபகாரி, சமூகசேவகர் என்றெல்லாம் கூறுவார்கள். ஆனுல் அவைகள் பற்றியெல்லாம் நான் அதிகம் அக்கறைகாட்டிக் கொள்வதில்லை'' என்கிருர் புன்முறுவலுடன் டாக்டர்.

தேவர்கள் மகிழ்ந்து மலர் மாரிசொரிந்து தங்களுடனேயே ஆசனம் கொடுத்து அமரச்செய்துகொள்கிறார்கள்.

இது வெறும் கற்பனைதான் ஆனுல் பூவுலகில் மகாசனங்

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எக்ஸ்ரே கருவிப் பிரிவு

## சுகாதார அமைச்சர் இன்று அடிக்கல் நாட்டுகிறார்

பல வழிகளிலும் இன்று அபிவிருத்தியடைந்து வருகின்ற கிளிநொச்சி மாவட்டத்தில் வாழுகின்ற சுமார் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்களது வைத்தியத் தேவைகளை நிறைவுசெய்து வருகின்ற கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் இன்று காலை எக்ஸ்றே பிரிவிற்கான அடிக்கல்லை சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்துபத்து சம்பிரதாய பூர்வமாக நாட்டிவைக்கிறார்.

எக்ஸ்றே பிரிவு ஆரம்பிக்கப்படுவதன் மூலம் கிளிநொச்சி வாழ் மக்களது நீண்டகாலக் கோரிக்கை ஒன்று நிறைவு பெறுகிறது. எக்ஸ்றே பிரிவு கருவிகளை இந்திய தூதரகத்தின்மூலம் இந்திய (தமிழ் நாடு) அரசு அன்பளிப்பாக வழங்குகிறது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரி அபிவிருத்தி சபையின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்துபத்து எக்ஸ்றே கருவிகளை கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு கொடுக்க அனுமதி அளித்துள்ளார்.

எக்ஸ்றே பிரிவிற்கான கட்டிடம் மூன்றரை லட்சம் ரூபா செலவில் அமையவுள்ளது. இதை கட்டிக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரி அபிவிருத்திச்சபை மேற்கொண்டுள்ளது. இதில் ஒரு பகுதிப் பணமான இரண்டு லட்சம் ரூபாவை கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதனின் வேண்டுகோளின் பேரில் யாழ் மாவட்ட அபிவிருத்திசபை வழங்கியுள்ளது;

மிகுதிப் பணத்தை பொது மக்களிடமிருந்தும் பொது ஸ்தாபனங்களிடமிருந்தும் பெற ஆஸ்பத்திரி அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரி கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல. முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழுகின்ற கிராம மக்களுக்கும் இவ் வைத்தியசாலை சேவை செய்கின்றது.

பொது மக்களின் உதவியுடன் ஆஸ்பத்திரிஅபிவிருத்திச் சபை ஏற்கெனவே சுற்றுமதில் ஒன்றையும்கட்டிக்கொடுத்துள்ளது.

பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு சேவையாற்றுகின்ற இந்த மாவட்ட வைத்தியசாலை ஆதாரவைத்தியசாலையாக தரமுயர வேண்டும் என்பது எமது பேரவாவாகும். இக் கோரிக்கையை சுகாதார அமைச்சர் நிறைவேற்றி தரவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி

---

## சுகாதார அமைச்சர் இன்று கிளிநொச்சி விஜயம்

(கிளிநொச்சி)

சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தப்பத்து இன்று கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரி எக்ஸ்றே பிரிவு கட்டிடத்திற்கான அடிக்கல்லை சம்பிரதாய பூர்வமாக நாட்டி வைக்கவுள்ளார்,

கிளிநொச்சி றெட்றிக்கோ விளையாட்டரங்கில் ஹெலிக்காப்டரில் வந்திறங்கும் சுகாதார அமைச்சர் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்வார்.

எக்ஸ்றேபிரிவு கட்டிட அடிக்கல்நாட்டு வைபவம் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பி. ரத்தினராசா தலைமையில் நடைபெறும். ஆஸ்பத்திரியை ஆதாரவைத்தியசாலையாக தரமுயர்த்துமாறுகோரும் மகஜர் ஒன்றை கிளிநொச்சி ஆஸ்பத்திரி அபிவிருத்திசபைத் தலைவர் டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபை சார்பில் சுகாதார அமைச்சரிடம் கையளிப்பார்.

இவ் வைபவத்தில் வைத்து எக்ஸ்றே பிரிவு கட்டிடத்திற்கான நிதியும் பொதுமக்களிடமிருந்து ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபையால் திரட்டப்படவுள்ளது.

அடிக்கல்லை நாட்டி வைக்கும் அமைச்சர் உடனடியாகவே கொழும்பு திரும்புவார்.

---

## இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி— 16 (30-6-1984)
வாரம்—சனி
திதி—பிரதமை காலை 7-59ன் மேல் துதியை
நட்சத்திரம் — புனர்பூசம் இரவு 7-25 வரை

மேடம்: உல்லாசமாகப் பொழுதைப் போக்குவீர்கள் இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத்தேடித்தரும்பொருள் வரவிற்கும் இடமுண்டு.

இடபம்: அன்னிய வாசம் அமைதிக்கு உலைவைக்கும் அபாயகரமான காரியங்களில் ஈடுபடுவோர் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ளவும் தெய்வ நம்பிக்கை நன்று.

மிதுனம்: ஒளிமயமான சூழ்நிலை உருவாகும் வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும் இருமனம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவம் நிகழும்.

கடகம்: செலவினங்கள் அளவிற்கு மிஞ்சியதாக இருக்கும் நண்பர்களின் தொல்லைகளால் நஷ்டமடைவீர்கள் தொழில் புரியும் இடத்தில் புதியஎதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம்.

சிங்கம்: அறிஞர்களின் சந்திப்பு இன்று நிகழும் அறவழியில் ஆர்வம் பிறக்கும் ஆக்கப் பணியில் கவனம் செலுத்தவும் இலட்சியவாதிகளுக்கு இன்று பொன்னனதினம்.

கன்னி: இதயங்கள் இணைவதற்கு இன்று நல்லநாள் அபிப்பிராயபேதங்கள் மறையும் பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர் குடும்பத்தில் அமைதி நிலவும்.

துலாம்: இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும் காதல் கணைதாக்கும் கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்பாலுணர்ச்சி மேலிடும்.

விருச்சிகம்: எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்து உந்தும் ஏமாற்றம் தாக்கும் விந்தையானபோக்கு வேடிக்கை காட்டும்.

தனுசு: பேச்சுவார்த்தைகளில் உணர்ச்சி வசப்படாதிருப்பது நன்று அவசர முடிவின் மூலம் விரோதத்தை தேடிக் கொள்ளுவீர்கள் துதிபாடிக் கொண்டே துரோகம் செய்வார்கள்.

மகரம்: நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படும் நீண்டநாள் கடன்தொல்லை இன்று நிவர்த்தியாகும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் சுபநாள்.

கும்பம்: வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம் வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று பெரியோரைப் பகைத்துக் கொள்ளாதுபொறுமையைப் பேணி நடக்கவும்.

மீனம்: இதயம் இன்று இன்பத்தால் விம்மும் குடும்பத்தில் உறவு முறைகள் மிகவும்அன்பு கொண்டதாகஇருக்கும் புத்திரராலும் மதிப்பு உயருவதற்கு இடமுண்டு சுமாரானதினம்.

திருமலை
வே. ரவீந்திரன்

---

## ரூபவாஹினியில் இன்று

மாலை
5-30 'பிஜன்ஸ்ரீட்' (ஆங்கிலம்)
6-00 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
6-25 'பிளேஹவுஸ்' [ஆங்கிலம்]
6-55 செய்திகள் [தமிழ்[
7-15 தகவல் நிகழ்ச்சி
7-45 'டாட்ஸ் ஆர்மி' நகைச்சுவைச் சித்திரம் [ஆங்கிலம்]
8-15 செய்திகள் [சிங்களம்]
8-35 நாடகம் [சிங்களம்]
9-05 இசை [சிங்களம்]
9-30 செய்திகள் [ஆங்கிலம்[
9-50 'பொம்பா தஜங்கிள் போய் [ஆங்கிலம்]
10-30 உலகச் செய்திகள்
10-35 பொம்பா த ஜங்கிள் போய் தொடர்ச்சி
11-10 நிகழ்ச்சிகள் முடிவு

---

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரியம்பாள் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் அபிஷேக ஆராதனையும், பூசையும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் ஜூலை மாதம் 8ம்திகதி வேட்டைத் திருவிழாவும், 11ம் திகதி தேர்த் திருவிழாவும், 12ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

★

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவடி ஸ்ரீ ஞானவைரவ சுவாமி கோவில் அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இவ் அலங்கார உற்சவம் தொடர்ந்து 27 நாட்கள் நடைபெறும். மாலை விசேஷ அபிஷேக ஆராதனையும், வசந்த மண்டபப் பூசையும் அதன்பின்னர் சுவாமி வெளிவீதி வலம் வருதலும் நடைபெறவுள்ளது.

ஜூலை 27ம் திகதி பகல் சங்காபிஷேகமும், இரவு வசந்தமண்டபப்பூசையும், நியாய அர்ச்சனையும், திருஊஞ்சலும் நடைபெற்று, பூந்தண்டிகையில் பெருமான் வீதிவலம் வருதலும் இடம்பெறும்.

★

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய மகோற்சவம் ஜூலை 2ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 11ம் திகதி தேர்த் திருவிழாவும், 12ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

6ம் திருவிழாவன்று, பகல் அப்பியங்க ஸ்நானமும், 7ம் திருவிழாவன்று சண்டிகேஸ்வரர் அனுக்கிரகமும், 9ம் திருவிழாவன்று கிருஷ்ணகந்தலேபனம் ஆகிய விழாக்கள் நடைபெறும். (ப)

---

## அடியார்குறை தீர்க்கும் வீமன்காமம் வைரவர்

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி. இதை அனுசரித்து கிராமங்கள் தோறும் ஆலயங்கள் அமைத்தும் அவற்றை மையமாக வைத்து சமய நெறியை கட்டிக் காப்பதில் எமது தமிழ் மக்கள் அன்று தொட்டு இன்று வரை கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள்.

இந்த வகையில் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த மாவிட்டபுரம் திருத்தலத்திற்கு அணித்தாக பழைமையும், பெருமையும் வாய்ந்த வைரவர் ஆலயம் ஒன்று பழை வீமன் காமம் தலையிட்டி என்னுமிடத்தில் மிகவும் சிறப்பான முறையில் புனரமைக்கப்பட்டு அருள் ஒளி பரப்பும் நிலையமாக திகழ்ந்து வருகிறது.

இவ்வாலயத்தில் 1982ம் ஆண்டு ஜூன் 24ம் திகதி மகா கும்பாபிஷேக விழா இடம் பெற்று அன்றிலிருந்து தினமும் மூன்று காலப் பூசையும், ஸ்நபன அபிடேகமும், உள்வீதி சுவாமி வீதியுலாவும் இடம் பெற்று வருகிறது.

வருடா வருடம் 25 தினங்கள் விசேட அலங்கார உற்சவமும் நடைபெற்று வருகிறது. இவ்வருட உற்சவம் ஜூன் 19ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது இவ்வருடம் மற்றுமோர் புதிய அம்சமாக தினமும் ஆறு காலப் பூசை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆலய பிரதம குருக்கள் சிவாச்சார்ய மணி சிவஸ்ரீ வை. ஜீவநாதக் குருக்கள் இந்த ஆறு கால பூசையை ஆரம்பித்து வைத்தார்.

இவ்வாலயம் மேலும் வளர்ந்து அருள் ஒளி பரப்ப எல்லாம் வல்ல வைரவப் பெருமானின் துணை என்றும் கிடைக்கவேண்டுமென பிரார்த்திப்போம்.

ஜி. இராமநாதன்

---

## வாழ்வாங்கு---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு சுயநலமின்றி சேவை புரியும் பெரியோர்களுக்கு இவ்வாறே மேலுலகில் வரவேற்புக் கிட்டும் என்று கருதுவதினால் நம் டாக்டருக்கும் மேலுலகில் இவ்வாறே பதவி கிடைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை இன்று அவர் நம் மத்தியில் இல்லாவிடினும் அவரது இலட்சியங்களும், அவைகளின் சின்னங்களும் அவரை நினைவு படுத்திக் கொண்டேயிருக்கும்.

அவரது பணிகளால் பயன் அடைந்த அன்பு நெஞ்சங்கள் என்றும் நன்றியுடன் நினைவு கூறும்.

டாக்டர் குப்புசாமி

---

## நல்லூர் ஆலய...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலய பரிபாலகர்கள் இந்த வீதியை ஆலயத்திற்கு உரித்தாக்கும்படி பிரதமரிடம் கோரியிருந்தனர், யாழ், அரசாங்க அதிபரும், கோவிலுக்கு இவ்வீதியை உரித்தாக்கும்படி காணி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

தற்போது இவ்விடயம் அமைச்சர் திரு. செ. இராசதுரையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு, இவ் வீதியை கோவிலுக்கு உரிமையாக்க முயற்சிக்குமாறு கோரப்பட்டுள்ளது,

ஆரம்பம் முதல் இவ்வீதி விடயமாக அக்கறை எடுத்து வந்த யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு, சி. வி. கே. சிவஞானம், இதற்காகும் விலைமதிப்பை பொதுமக்களிடமிருந்து வசூலித்து கொடுக்க ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார். (க)

---

## விசேடபஸ் சேவை

(சுண்டுக்குளி)

தற்போது நடைபெற்று வரும் மடுமாதா ஆலய திருநாளை முன்னிட்டு வட பிராந்திய போக்கு வரத்துச்சபை. யாழ்.நகரில் இருந்து விசேட பஸ்சேவை ஆரம்பித்துள்ளது.

திருநாள் இறுதி நாளான ஜூலை 2ம் திகதி இந்த பஸ்கள் மடுக்கோவிலிலிருந்து புறப்பட்டு-யாழ்நகர் வந்து சேரும்

---


## யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

### நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?

உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

### குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான இருவழி பயணச்சீட்டும், விசா மற்றும் டென்மார்க் செல்வதற்குத் தேவையான விசா மற்றும் சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

Cross Travel Services (Pte) Ltd.
STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD,
JAFFNA,
Phone No : 22040, 22065.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைவளர அபிவிருத்திச் சங்கங்கள் பாடுபடவேண்டும்!

(பண்டத்தரிப்பு)

''பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் பாடசாலையின் முக்கிய தேவைகளை நிறைவேற்றுவதற்கும், பாடசாலையின் கல்வி அபிவிருத்திக்கும், பாடசாலையின அதிபர், ஆசிரியர்களுடன் ஒத்துழைத்து பாடுபடவேண்டும். இதனை விடுத்து பாடசாலையின் நிர்வாகத்திற்கு உபத்திரவம் கொடுக்கும் அமைப்பாக இச்சங்கங்கள் இயங்கக்கூடாது என்பதை இங்கு கூறி வைக்க விரும்புகிறேன்.'' இவ்வாறு சித்தன்கேணி கணேசவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் சங்கத் தலைவரும், வித்தியாலய அதிபருமான திரு. நா. க. தங்கரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ''எமது பகுதிபாடசாலைகளை தளபாடப் பற்றுக்குறை, ஆசிரியர் பற்றுக்குறை போன்ற பல்வேறு பிரச்னைகள் எதிர் நோக்குகின்றன. இவற்றை தீர்த்து வைக்கபாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் முற்படவேண்டும் என்றும் மாணவரின் கல்வி வளர்ச்சியிலும், பாடசாலை அபிவிருத்தியிலும் இச்சங்கங்கள் அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருடன் ஒத்துழைத்து செயலாற்றவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ஓய்வு பெற்ய வித்தியாலய அதிபர் திரு. வே. தம்பையா ஆகியோர் உட்பட பலர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். சங்க புது வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவாகினர்

தலைவர்: திரு. நா. க. தங்கரத்தினம் (அதிபர்), செயலாளர்: திரு. எஸ். தட்சணாமூர்த்தி, பொருளாளர்: திருமதி பூமணி வேலாயுதபிள்ளை செயற்குழு உறுப்பினர்க்ளாக எட்டுப் பேர் தெரிவாகினர். (சூ)

## நிதி உதவி

(புலோலி)

ஜூலையில் இடம் பெற்ற கலவரத்தில் உயிரிழந்த புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கப் பணியாளர் நல்லான் காந்தியின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கும் முகமாக பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரால் 3,000 ரூபா கையளிக்கப்பட்டது.


மரண நிதியுதவித் தொகையாகச் சேகரிக்கப் பட்ட பணத்திலிருந்தே உதவி அரசாங்க அதிபரால் திருமதி வசந்தா காந்தியிடம் 3,000 ரூபா பணமும் கையளிக்கப் பட்டது. உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடை பெற்ற கையளிப்பு வைபவத்தில் புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர். திரு. எஸ். அருணகிரியும் சமூகமளித்திருந்தார்.

## சம்பத்திரிசிய அதிபருக்கு ஆசிரிய வெள்ளிவிழா

தொழில்களுள் புனிதமான தொழில் கடினமான தொழில் மனித உருவாக்கலில் தன்னை அர்ப்பணிக்கும் தொழில் ஆசிரியத்தொழில். ஆசிரியத் தொழிலில் ஒருவர் வெள்ளி ழாக்காணுகின்ருர் என்ருல் அவர் ஒரு யுகத்தின் சிருஷ்டி கர்த்தா எனத் துணிந்துகூறலாம்: இவ்வகையில் சம். பத்திரிசிய அதிபர் அருட்திரு பிரான்சிஸ்யோசப் அடிகள் ஒரு யுகத்தின் சிருஷ்டிகர்த்தா. எனத் துணிந்துகூறலாம். சம்பத்திரிசியார் கல்லூரிக்காக 25 வருடங்கள் இரத்தத்தை வியர்வையாக்கிய உத்தமகுரு அவர். அவரின் வியர்வையிலே விளைந்த சம்பத்திரிசிய வயல் பூத்துக்குலுங்குகிறது. நன்றியுடன்தன் தலைவனின்தாளிலே தலைசாய்த்து மகிழ்கிறது.

சம்பத்திரிசிய குடும்பவிழாவாகஇன்று சனிமலரும் அதிபரின் 25வது பிறந்ததின விழாவிலே தன்குடும்பத்தலைவனுக்கு நன்றிகூறிட குவித்தகரத்துடன் குதூகல முகத்துடன் கூட உள்ளனர் சம்பத்திரிசிய மாணவர்கள் ஆசிரியர்கள் பழைய மாணவர்கள். திருப்பலி நிறைவேற்றி இறைதுதி பாடி பின்னர் பெருவிழாக் காணவுள்ளனர். சம்பத்திரிசிய குடும்பத்தினர். அவர்களின் மகிழ்வுடன் அருட்திரு. பிரான்சிஸ் யோசப் அடிகளின் பலவாருன சேவைகளை பெற்ற தமிழ் கூறும் நல்லுலகம் இணைந்துமகிழ்கின்றது.

— பற்றிமாகரன்.


# தரியாமல் றேனோல்ட்ஸ் விரைவாக எழுதும்!

எந்தச்சாதாரண குமிழ் முனைப் பேனாவையும் தரையிலே முனை படக் கீழே போடுங்கள். பிறகு, அதன் எழுத்து எப்படிக் குலையுமென்று பாருங்கள்.

றேனோல்ட்ஸ் அப்படியன்று. ஏனெனில், கடும் அடி பட்டாலும் கண்டபடி பாவித்தாலும், தன் மென்மை குலையாதபடி, தனித்துவமாக உருவாக்கிய டங்ஸ்டன் கரபைட் குமிழ் முனை கொண்டது றேனோல்ட்ஸ். அத்துடன் அதி சிறந்த மையை அடக்கியிருப்பது றேனோல்ட்ஸ். இந்த இரண்டு அம்சங்களுடன், பிரான்ஸ் தேசத்து றேனோல்ட்ஸ் நிறுவனத் தொழில் நுட்பத் திறனும் தரக் கட்டுப்பாடும் அதில் இணைந்திருக்கின்றன.


விளைவு - தொடக்கி முடிக்கும் வரை, சிறப்புயர்ந்த, தெளிவான, சுத்தமான, மெத்தென்ற எழுத்தை உங்களுக்கு வழங்கும் உண்மையான உன்னதப் பேனா. களங்கக் கறை இல்லை. தலைவலி தரும் மைத் தடை இல்லை. கசிந்து பொசியும் தொல்லையே இல்லை.

எனவே, நீங்கள் எழுதும் இடம் –
வித்தியாசாலை, வேலைத்தலம், வீடு, எதுவானாலும்–
நாடுங்கள் றேனோல்ட்ஸ் –

**எப்பொழுதும் அது இதமாக எழுதும்.**

**இலவச அறிமுகச் சலுகை**

பாடசாலைகள். அலுவலகங்கள். கடைகள். தொழிற்சாலைகள். ஹோட்டல்கள். குறைந்தது 1000 பேனாக்களுக்குக் கொள்முதற் கட்டளை அனுப்புங்கள். (18 எழுத்துகளுக்கு மேற்படாமல்) உங்கள் நிறுவனப் பெயர் அல்லது ஒரு வாசகத்தைக் குழாயில் இலவசமாக அச்சிட்டு வழங்குவோம்.
நாடுங்கள்: விற்பனைப் பிரிவு நிர்வாகி,
ஷோ வலஸ் அன்ட் ஹெட்ஜ்ஸ் லிமிட்டெட், தொலைபேசி: 20671-9



விலை: ரூபா 3.25

உற்பத்தியாளர்:
பென்பெல்ஸ் லிமிட்டெட்.
பிரான்ஸ் தேசத்து றேனோல்ட்ஸ் நிறுவனத் தொழில் நுட்பக் கூட்டுறவுடன் தயாரித்தது.

விநியோகிப்போர்:
ஷோ வலஸ் அன்ட் ஹெட்ஜஸ் லிமிட்டெட்

TAL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைக்கந்தன் ஆலயத்தில் சிரமதானம்

(மாவிட்டபுரம்)

சரித்திரப் பிரசித்தி வாய்ந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவத்தை முன்னிட்டு வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் செயலகத்தின் ஏற்பாட்டில் சிரமதான இயக்கம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

கோவில் ஆதீனகர்த்தாவும், பிரதம குருவுமான மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் கோவிலில் விசேட பூசை வழிபாட்டை மேற்கொண்டு சிரமதானத்தில் கலந்து கொண்டோருக்கு விபூதிப் பிரசாதம் வழங்கினர்.

வலி. வடக்கு . உதவி அரசாங்க அதிபர் திரு. க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இச் சிரமதானத்தில் அரசாங்க அதிகாரிகள், முன்னுள் கிராமோதய சபைத் தலைவர்கள், கிராம சேவையாளர்கள், விசேட சேவைஅலுவலர்கள், வீமன்காமம் மகா வித்தியாலய மாணவர்கள், பொதுநலசேவா சங்கங்களின் பிரதிநிதிகள், மாதர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர் சிரமதானத்தில் கலந்து கொண்டோருக்கு மாவிட்டபுரம் சிமெந்து வர்த்தகஸ்தாபனத்தினர் குளிர்பானம் வழங்கி ஆதரித்தனர்.

இச்சிரமதானத்திற்கான ஒழுங்குகளை வலி- வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலக பிரதம லிகிதர் திரு. நடராஜா மேற்கொண்டிருந்தார்.


**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

**வெஸ்லி** (மாணிப்பாய்)
தினசரி 2-30, 5-30
**மீண்டும் கோகிலா**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
**நீரும் நெருப்பும்**
கலர்

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்- ஜெயலலிதா
**தாய்க்குத் தலைமகன்**
(புதிய பிரதி)

**சாந்தி** (யாழ். நகர்
10-30, 2-30, 6-30
ஜெமினி - ஜெய்சங்கர்
**அன்புக்கோர் அண்ணன்**
(புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி — கீதா
**மோகனப் புன்னகை**

**வின்சர்** (யாழ் நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
கடைசி வாரம்
எம்.ஜி.ஆர் ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)

**றீகல்** (யாழ். நகர்)
22nd to 1st
10-30, 2-15, 4-30, 6-30
John Hurt....
**NIGHT CROSSING**
Color

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-45
கடைசி 2 தினங்கள் 7-00
Top entertainment of the Day. New way of Action Karate
**SHOGUN'S NINJA**
(Scope Color)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-15
ஜெமினி - சாவித்திரி
**கற்புக்கரசி**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - உஷாநந்தினி
**மனிதனும் தெய்வமாகலாம்**
[புதிய பிரதி]
(ஈஸ்மன்கலர்)


## உதைபந்தாட்டம்

(பண்டத்தரிப்பு)

அராலி சில்வஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்திய அமரர் இ, கணேசலிங்கம் ஞாபகார்த்த சுழற், கேடயத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென், நீக்கலாஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

இப்போட்டியில் 23 விளையாட்டுக் கழகங்சள் பங்குபற்றின. பொம்மைவெளி பிரன்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் நாவாந்துறை சென். நீக்கலாஸ் விளையாட்டுக் கழகமும் இறுதிப் போட்டியில் பங்குபற்றி சென். நீக்கலாஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

## ஆலய நிர்வாகிகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு புனித பிராசிஸ் சவேரியார் ஆலய புதிய நிர்வாகிகள் நால்வர் சேர்க்கப்பட்டுள்ளனர்'

வி. அமிர்தவாசம்' எஸ்.வில்லியம்' ஏ. சான்ஸ், எம்.மரியதாஸ் ஆகியோரே புதிதாகத் தெரிவானோர் ஆவர். 10 பேரைக் கொண்ட இந் நிர்வாக சபையில் எஸ்.பத்திநாதர், செ. நற்குணதாஸ், எஸ். சிங்கராசா, ஆர். இருதயராசா ஆகிய நால்வரும் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து புதியவர்கள் நியமனம் பெற்றனர்.

## இன்றைய வானொலியில்

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 தோத்திரமாலை - ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மகரா வலம்பம்
6-00 சைவ நற்சிந்தனை
6-05 கிறிஸ்தவ நற்சிந்தனை
6-10 பாமாலை
6-25 நிகழ்ச்சிமுன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப் பாடல்கள்
7-05 இங்கிலிஷ் போர் யூ ஆங்கில நிகழ்ச்சி
7-30 மாகாணச் செய்திகள்
7-35 குரல்வகை
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 தாளவாத்தியக் கச்சேரி வைரவப்பிள்ளை வேனிலான்
9-15 தமிழ் மூலம் சிங்களம் என். டீ. பீரிஸ்
9-30 நாட்டுப்பாடல்கள்
9-45 ராக ஆலாபனையும் விளக்கமும் ஏ.கே.கருணாகரன்
10-00 ''சங்கமம்'' அறிவிப்பாளர் நிகழ்ச்சி
10-15 கதைப் பாட்டு
10-30 அறிவுச்சுழல் பொன். ராஜகோபால்
11-00 சித்திரம்: மரத்துக்கும் உயிருண்டு.
K.செல்வராஜா
11-45 மாணிக்க ஆரம்
11-58 பகல் ஒலிபரப்புமுடிவு

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-20 இப்தார் நிகழ்ச்சி
6-35 ஞானக்கோவை
7-05 முஸ்லிம் நிகழ்ச்சி

இரவு
8-00 உலகச் செய்திகள்
8-10 நாடகமேடைப் பாடல்கள்
8-40 மெல்லிசைத் தேர்வு
8-45 கண்டதும் கேட்டதும் (செய்திச் சுருள்)
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள்
9-30 மெல்லிசைப் பாடல்
9-45 நாடகம் ''விடியாத இரவுகள்'' விக்னு செல்வநாயகம்
10-15 பஜன் பெங்களூர் ஏ. ஆர். ரமணியம்மாள்
10-30 ஒலிபரப்பு முடிவு

## அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை முனியப்பர் கோவில் மணவாளக்கோல அபிஷேகம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி, தொடர்ந்து 25 நாட்களுக்கு நடைபெறும்.

இவ் அபிஷேகம் பிரதமகுரு பிரம்மஸ்ரீ கி. நாராயணக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

# 'சுமைகளைச் சமாளிக்க அளவோடு வாழ்வோம்!'

## குடும்ப நலத்திட்ட விழாவில் பேச்சு

(சாவகச்சேரி)

'நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு போகும் விலைவாசி உயர்வு காரணமாக மக்கள் பல்வேறு விதமான சுமைகளை அன்றுடம் வாழ்க்கையில் தாங்கவேண்டியுள்ளது. இவற்றினைக் குறைத்து மக்கள் நலத்துடன் வாழவேண்டுமாயின் குடும்பம் அளவுடன் இருத்தல் வேண்டியது மிகவும் அவசியமாகும். குடும்பங்களைத் திட்டமிட்டு நடாத்துவதன் மூலம், மக்கள் நலத்துடனும், செல்வத்துடனும் வாழலாம்'

இவ்வாறு நுணுவில் அம்பாள் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக பங்கு கொண்டு' உரையாற்றிய வட பிராந்திய குடும்பத்திட்டச் சங்கத் தலைவர், பேராசிரியர் எஸ் கணேசலிங்கம் தெரிவித்தார்.

நுணுவில் குடும்பநலத்திட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய சிறுவர்களுக்கு திருமதி கணேசலிங்கம் பரிசில்களை வழங்கினர்.

அம்பாள் சனசமூக நிலையத் தலைவர் திரு. வி. எஸ் துரைராஜா நன்றியுரை தெரிவித்தார்.


சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வ. உ.)

**பொது முகாமையாளர் பதவி வெற்றிடம் (தற்காலிகம்)**

**கல்வித் தராதரம்:**

(அ) 108/81-ம் இலக்க 25-11-81ல் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்டத்திற்கமைவாக வெளிவந்த சுற்று நிருபத்தில் கூறப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(ஆ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி அல்லது அத்தகைய தராதரமுடைய அரசாங்க சேவையில் அல்லது பிரபல வர்த்தக உற்பத்தி நிறுவனமொன்றில் முகாமை மட்டத்தில் 10 வருடத்திற்கு குறையாத அனுபவமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

எல்லா விபரங்களும் இணைக்கப்பெற்ற விண்ணப்பப் படிவம் ரூபா 2/- செலுத்தி சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பெற்ற விண்ணப்பப் படிவங்கள் யாவும் 14-7-84 அன்று அல்லதுஅதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக ''தலைவர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை'' என்ற முகவரிக்கு ''பதிவுத் தபால்'' மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்,
சங்கானை ப. நோ. கூ.,
சங்கம்.

25.6.84.
சங்கானை.
(564)


# ''சமயக் கல்வியை—— கிராமப்பாடசாலைகளே செயல்படுத்தமுடியும்!''

(மாவிட்டபுரம்)

''கிராமப்புறப் பாடசாலைகள் மூலம்தான் சமயக்கல்விப் போதனையை சிறப்பாக செயல்படுத்த முடியும், சமயமும், அறிவும் ஒருசேர வளரும்வண்ணம் புகட்டப்படும் கல்வியினுல்தான் நல்ல பிரஜைகளை உருவாக்க முடியும். ஆகவே கிராமப்புற பாடசாலைகள் சிறந்த சமயச் சூழலை வளர்த்து நல்ல பிரஜைகளை உருவாக்க வழிசமைக்க வேண்டும்.''

இவ்வாறு அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதய வித்தியாசாலை பரிசளிப்பு விழா நிறுவியவர் நினைவுநாள் விழா ஆகியவற்றில்பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை கூறினுர்.

வித்தியாசாலை மண்டபத்தில் அதிபர் திரு. க. திருநாவுக்கரசு தலைமையில் இவ் விழா நடைபெற்றது.

வட மாநில கல்வியதிபதி திரு சிமியாம்பிள்ளை மேலும் பேசுகையில் சிறிய பாடசாலையாகிய இப்பாடசாலை இவ்வாறுன விழாவைக் கொண்டாடுவது பாராட்டுதற்குரியதெனவும், இப்பாடசாலை சிறப்பாக வளர்ச்சியடைந்து வருகின்றதெனவும் குறிப்பிட்டார்.

வடமாநில ஆங்கில வட்டாரக் கல்வியதிகாரி திரு. கே. குலசேகரம், காங்கேசன் துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. பொ. சிவஞான சுந்தரம் ஆகியோர் இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் திறமையையும் சேவை மனப்பான்மையையும் பாராட்டிப் பேசினர்.

சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு, முன்னுள் அதிபர் திரு. சி. சின்னத்துரை, ஆசிரியர் திரு. அ. விஸ்வநாதன் ஆகியோரும் உரையாற்றினுர்கள். திருமதி ஜெயமணி சிமியாம்பிள்ளை பரிசில்கள் வழங்கினுர். இறுதியில் பாடசாலைஅபிவிருத்திச் சங்க செயலாளர் திருமதி பா. இரத்தினம் நன்றி கூறினுர்.

## சேவைநலம் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் அல்லைப்பிட்டி பாராசக்தி வித்தியாசாலையின் அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறும் பொன். தியாகராசாவுக்கு அல்லைப்பிட்டியில் சேவை நலம் பாராட்டு விழா நடைபெற்றது. (சூ)


**விற்பனைக்கு**

**(1) மறுசீர் அமைக்கப்பட்ட 28 அடி கல்நார் இழை மீன்பிடி வள்ளம்.**

**(2) 25 அடி கல்நார் இழை மீன்பிடி வள்ளம்.**

**(3) GM இயந்திரம் [MARINE] பரிவலு – 185 (மின்சார உற்பத்திக்கும் உபயோகிக்கலாம்).**

மேற்படி பொருட்களை கொள்வனவுசெய்யவிரும்புவோர் பொருட்களை சீ-நோர் நிறுவனம் காரைநகரில் உள்ள படகு கட்டும் தொழிற்சாலையில் காலை 8 மணிக்கும், மாலை 5 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் [சனி, ஞாயிறு தவிர்ந்த] நாட்களில் பார்வையிடலாம்.

உங்கள் விலை கேள்வியை பொதுமுகாமையாளர் சீ-நோர் நிறுவனம் குருநகர் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 14-7-84க்கு முன் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும்.

**பிரதி பொதுமுகாமையாளர்.**

தொலைபேசி : 23604.
குருநகர்.
447


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு உற்பத்தி தடை: போராட்டம் தொடர்கிறது!

[யாழ்ப்பாணம்]

கசிப்பு உற்பத்தியையும், விற்பனையையும் தடைசெய்யும் முயற்சியில் ஈடுபட்டுவரும் 'கிராமிய விழிப்பு மன்றத்தினர்' உரும்பராய் கொலனிப் பகுதியில் உள்ள வீடுகளில் சோதனை நடாத்தி ட்றம்களில் இருந்த கோடாவையும், கசிப்பு வடிக்கும் உபகரணங்களையும் கசிப்புவைத்திருந்த போத்தல்களையும் எடுத்துஅழித்தொழித்தனராம்.

இந்த நடவடிக்கையில் கிராமிய விழிப்பு மன்றத்தைச் சேர்ந்த 50 ஆண்களும் பெண்களும் ஈடுபட்டிருந்ததாகவும் இதில் கற்பவதிகளும், கைக் குழந்தைகளைத் தாங்கிய தாய்மார்களும் அதிகமாக இருந்ததாகவும் மன்ற உறுப்பினர்ஒருவர் தெரிவித்தார்.

உரும்பராய் பகுதிக்குள் வெளி இடங்களிலிருந்து கசிப்புஎடுத்துவருவதை இரவு-பகலாகக் கண்காணிப்பதிலும் மன்றத்தினர் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

கசிப்பு உற்பத்தி விற்பனையை ஒழிக்க கடந்த 24ம் திகதி கிராமிய விழிப்புமன்றத்தினர் உரும்பராய் சனசமூக நிலையம்முன் அடையாள உண்ணாவிரதம் இருந்தனர்.

அடுத்து 25ம் திகதி அப்பகுதியில் கசிப்பு விற்பனை செய்த சில வீடுகளுக்குள் காலை மறியல் போராட்டம் ஆரம்பித்தனர்.

குறிப்பிட்ட வீடுகளின் உரிமையாளர்கள், கசிப்பு இனிமேல் விற்பனைசெய்ய மாட்டோம் என வாக்குறுதி அளித்ததன்பேரில் மறியல் போராட்டம் கைவிடப்பட்டதாகவும், மேற்கொண்டு யாழ். மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி விற்பனையைத் தடுக்கும் சாத்வீகப் போராட்டத்தில் மன்றத்தினர் தீவிரமாக ஈடுபடப்போவதாகவும் அவர் சொன்னார். (மா)

## இன்று

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாசத்தின் விசேட நிர்வாகசபைக் கூட்டம் இன்று காலை யாழ்ப்பாணத்தில் நடை பெறவிருக்கிறது. இச் சமாசத்தின் செயலாளர் சி.சி வரதராசா இதற்கான அறிவித்தல்களை அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெற விருக்கும் இக் கூட்டத்தில் சனசமூகநிலையங்களின் செயற் பாடுகள்' புதிய நடவடிக்கைகள் பற்றிய விடயங்கள் பல ஆராயப்படவிருக்கின்றன.

## புங்குடுதீவு அந்தோனியார் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் ஜூலை 6 ம் திகதி காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்று மாலை 'ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காக வேண்டுதல்' கருதி கூட்டுப் பிராத்தனையும் பூசையும் நடைபெறும்.

7 ம் திகதி மாலை 'நாட்டில் சமத்துவம்,சமாதானம் நிலவ வேண்டி தியானவழிபாடும் பூசையும் நடைபெறவுள்ளது.

8 ம் திகதி காலை விசேட பூசை. அதனைத்தொடர்ந்து அந்தோனியார் தேர்ப்பவனியும் பத்தர்களுக்கு புனிதரின் ஆசியும் நண்பகல் அன்னதானமும் இடம்பெறும். (மா)

## திங்கள்முதல்-..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு மாவட்டரீதியில் அல்லது மாகாணரீதியில் பரவலாக்கப்பட்டு அவற்றில் ஓய்வு பெற்ற நீதிபதிகளும் இடம் பெற வகைசெய்ய வேண்டும்,

கூட்டுறவு ஊழியர் சம்பளத்திலிருந்து கட்டாயமாக அறவிடப்படும் ஒருவீத புனருத்தாரண வரியை உடன் நிறுத்தல்.

தொடர்ந்து நட்டத்தில் இயங்கும் சங்கங்களின் நிர்வாகங்களைக் கலைத்து நட்டங்கள் ஏற்படுவதன் காரணங்களை ஓர் விசாரணை மூலம் கண்டறிந்து நடவடிக்கை எடுத்தல்.

சகல தற்காலிக ஊழியருக்கும் உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கல். (மா)

## யாருடையது

குருநகர் புனித மாட்டினுர் குருமடத்தைச் சேர்த்த செல்வன் சுப்பிரமணியம் காந்தரூபராஜ்ஜின் அடையாள அட்டையைச் சாவகச்சேரியைச்சேர்ந்த திரு. கே. ஜீவநாயகம், நாரந்தனையைச் சேர்ந்த திருமதி அம்புரோசியா அந்தோனிபர்ணாந்துவின் அடையாள அட்டையை திரு. எஸ். நாதனும், திரு. கார்மேகன் ரவிச்சந்திரனின் புகைப்படங்களை திரு.எஸ். ரவிச்சந்திரனும் கண்டு எடுத்து ''ஈழநாடு'' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (கி)


## தமிழ் ஆசிரியர் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் 15பேருக்கு இடமாற்றக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்த இடமாற்றக் கடிதங்கள் யாழ். கல்விக்கந்தோருக்கு கிடைத்திருப்பதாக அறியப்படுகிறது.

இடமாற்றம் பெற்றுள்ள மற்றும் ஆசிரியர்களின் கடிதங்களும், படிப்படியாக அனுப்பி வைக்கப்படுமெனக் கூறப்படுகிறது. (க)



பனம்பொருள் அபிவிருத்தி சபையின் விற்பனைக் காட்சி நிலையம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் இந்த நிலையத்தைத் திறந்து வைத்தார்.

விற்பனைக் காட்சி நிலயத்தை யாழ். அரசாங்க அதிபர் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும், அருகில் சபைத்தலைவர் திரு. கே. நடராசா இருப்பதையும் முதல் படத்திலும், தொழில் அதிபர் 'சிவதர்ம வள்ளல்' திரு. கனகராசா, அரசாங்க அதிபரை வரவேற்பதை இரண்டாவது படத்திலும் இங்கு காணலாம்.

# சேதமுற்ற ஆலயங்களை பார்வையிட்டனர்!

(சாவகச்சேரி நிருபர் க. ஜீவகதாஸ்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள அகதிகள் முகாம்களைப் பார்வையிடுவதற்கும் அண்மைக்கால வடபகுதிச்சம்பவங்கள் காரணமாக சேதமுற்ற மதபீடங்களைப் பார்வையிடும் பொருட்டும் அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தின் குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளது

அத்தியாவசிய சேவைகள் திணைக்கள ஆணையாளரின் பிரதிநிதியான திரு. எல். வி. பீ. வி. சோமச்சந்திரா தலைமையிலான இக்குழுவினர் நேற்று குருநகர், கைதடி அகதிகள்முகாம்களைப் பார்வையிட்டதுடன், அங்கு வசிக்கின்ற மக்களின் குறை நிறைகளையும் கேட்டு அறிந்து கொண்டனர்.

யாழ் நகரில் இக்குழுவினர் அடைக்கல மாதாகோவில் ஸ்ரீ நாகவிகாரை போன்ற இடங்களுக்கும் சென்று அங்கேற்படுத்தப்பட்ட சேதங்கள் பற்றியும் பார்வையிட்டனர்.

இன்று இக்குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள அகதிகள் முகாம்களுக்கும் விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

# ஜூலைக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட சிலருக்கு யாழ். வை. எம். சி. ஏ. உதவி!

(யாழ்ப்பாணம்)

83-ஜூலைக் கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட இரு பெண்களுக்குச் சுமார் 14-ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்களை யாழ். வை. எம். சி. ஏ. நன்கொடையாக வழங்கியுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்ட மரக்கறி வியாபாரிஒருவர், நில அளவையாளர் ஒருவர், 24 சிகை அலங்கரிப்பாளர்களுக்கும் தலா ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களை யாழ். வை. எம். சி. ஏ. நிவாரண உதவியாக வழங்கியுள்ளது.

யாழ். வை. எம். சி. ஏ. கட்டிடத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அதன் தலைவர் திரு. எம். வி. திஸநாயகம் குறிப்பிட்ட தொழில் உபகரணங்களை வழங்கினர்.

இவ்வைபத்தில் யாழ். வை. எம். சி. ஏ. அபிவிருத்திக் குழுத் தலைவர் திரு. எம். சி. பிரான்சிஸ், பிரதம செயலாளர் திரு. எம். தம்பித்துரை, பொருளாளர் திரு. சாம். சதாசீவன் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

### வெலிகடை சிறையில் கொல்லப்பட்டவர் மனைவிக்கு

83 ஜூலை கரவரத்தின் போது வெலிகடைச் சிறைச்சாலையில் கொல்லப்பட்டவர்களுள் ஒருவரான ஸ்ரீ குமார் என்பவரின் மனைவி கமலாம்பிகை ஸ்ரீ குமாருக்கும்' கொழும்பில் தையல்வேலை செய்து பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் திரும்பியிருக்கும் திருமதி. பி. மகாதேவராசாவுக்குமே இரு தையல் மெஷின்கள் வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த செல்வி நாதன் என்பவர் செம்மணி வீதியில் சிறுவர் பாடசாலை நடத்த தளபாடவசதிக்கு 2 ஆயிரம் ரூபாவும், வண்ணார் பண்ணையில் சொர்ணலிங்கம் என்பவர் கோழிப்பண்ணை நடாத்த 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டதாகவும், அபிவிருத்திக் குழுத்தலைவர் தெரிவித்தார்.

# செய்தித்தணிக்கை

அவசரகாலச்சட்டம் 14 (1) விதிகளுக்கு அமைய பின்வரும் விஷயங்களை பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு முன்னர் ராஜாங்க அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- பயங்கரவாதத்துடன் தொடர்புடைய வன்செயல் பற்றிய நடவடிக்கைகள்.
- கொள்ளை மற்றும் அரசாங்க தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் — தாக்குவோர்— ஆயுதம் தாங்கியவர்களாக இருந்தால்.
- பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள் அல்லது பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய விசாரணைகள்.
- கொழும்'பில் இஸ்ரேல் நலன்காப்புப் பிரிவு ஏற்படுத்துவதற்கும் அல்லது பாதுகாப்புச் சேவை மற்றும் பொலிஸ் பயிற்சிக்காக எவரிடமாவது உதவி கேட்டலுக்கு எதிரான ஆட்சேபங்கள்.
- தேசிய ஒற்றுமையும் சட்டத்தையும் அல்லது சமுகத்திற்குத் தேவையான விநியோகம், சேவைகள் போன்றவற்றை பாதிக்கக்கூடிய விஷயங்கள்.

# சாவகச்சேரி குடிநீர்த் திட்டம்

(மட்டுவில்)

ஐக்கிய அமெரிக்க, வெளிநாட்டு நிதி உதவி நிறுவனத்தின் உயர்அதிகாரி கலாநிதி லெக்கோய் பொக்கிபோய் சாவகச்சேரி குடிதண்ணீர் விநியோாகத்திட்டத்திற்கு புதனன்று திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

இவருடன் உதவியாளரான கலாநிதி ஜோய் தனராஜூம் வந்திருந்தார்.

இவர்களை சாவகச்சேரி குடிநீர் விநியோகத் திட்டத்தின் உதவிப் பொறுப்பதிகாரியான பொறியியலாளர் திரு. ஸி. கமலாகரன் வரவேற்றார்.

அமெரிக்காவிலிருந்து இங்கு வந்துள்ள, நீர் விநியோகக் குழாய்கள், ஏனைய உபகரணங்கள் சரியானமுறையில் பராமரிக்கப்படுகின்றனவா என்பதை அவர்கள் நுணுக்கமாகப் பார்வையிட்டனர்.

சில தினங்களில் சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய இடங்களில், குடிதண்ணீர் விநியோகத் திட்ட வேலைகள் மீண்டும் ஆரம்பமாகும் என்றும் அதிகாரி கலாநிதி லெக்கோய்பொக்கி போய் தெரிவித்தார்,

இன்னும் இரண்டொரு மாதங்களில் இங்கு மழைகாலம் ஆரம்பமாகிவிடும். ஆகவே மிக முக்கியமான வேலைகள் அதற்குமுன் ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியத்தை பொறியியலாளர் கமலாகரன் அதிகாரிக்கு விளக்கிக் கூறினார்.

இதுசம்பந்தமாகச் சுமார் 20 நிமிட நேரம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இன்னும் சிலதினங்களில் கண்டிப்பாக வேலைகள் ஆரம்பமாகும். என அமெரிக்க அதிகாரி தெரிவித்தார்.

## நீதிமன்ற...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாகத் தெரிவித்துள்ளார். இவர் இப்பொழுது பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

## 2வது டெஸ்ட்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 2-வது நாள் ஆட்டத்தின் தேநீர் இடைவேளையின் போது மே. இந்தியக் கோஷ்டி 2 விக்கெட்டுகளை இழந்து 18 ஓட்டங்களைப்பெற்றிருந்தது.

இங்கிலாந்துக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 286 ஓட்டங்களைப் பெற்றது.

## சிகிச்சை பெற்ற...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த நாகம்மா என்ற பெண்ணும் காயமடைந்தார். கள்.

நேற்றுக்காலை10 மணியளவில் 10ம் வார்ட்டுக்கு வந்த இரு வாலிபரில் ஒருவர் வெளியில் ஒருவரை பணயம் வைத்துக் கொண்டிருக்க மற்ற வாலிபர் உள்ளே சென்றாராம்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org